ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2247/17 - 2021 සැප්තැම්බර් මස 29 වැනි බදාදා - 2021.09.29
*2247/17 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 24/51 (VII)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

**பவித்திரா வன்னிஆராச்சி,**
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு ,
2021, செத்தெம்பர் 29.

**ஒழுங்கு விதிகள்**

2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதிய 2221/ 57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மோட்டார் வாகன (சாரதி உரிமத்தின் செல்லுபடிக் காலப்பகுதியைத் தற்காலிகமாக நீடித்தல்) ஒழுங்குவிதிகள், அதன் 2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றன :-

"2. (அ) ஒவ்வொரு சாரதி உரிமத்திலும் குறித்துரைக்கப்பட்டவாறு 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து தொடங்குகின்றதும் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள் குறிப்பிட்டவொரு திகதியன்று முடிவுறவுள்ளதான (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் பாகம் VII இன் கீழ் மோட்டார் வாகனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அத்தகைய சாரதி உரிமத்தினது செல்லுபடிக் காலப்பகுதி, அத்தகைய முடிவுறுகைத் திகதியிலிருந்து பன்னிரண்டு (12) மாதங்களுக்கு இத்தால் நீடிக்கப்படுதல் வேண்டும் ;

1A - PG 5553 — 520 (2021/09)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) ஒவ்வொரு சாரதி உரிமத்திலும் குறித்துரைக்கப்பட்டவாறு 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து தொடங்குகின்றதும் 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள் குறிப்பிட்டவொறு திகதியன்று முடிவுறவுள்ளதான (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் பாகம் VII இன் கீழ் மோட்டார் வாகனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அத்தகைய சாரதி உரிமத்தினது செல்லுபடிக் காலப்பகுதி, அத்தகைய முடிவுறுகைத் திகதியிலிருந்து ஆறு (6) மாதங்களுக்கு இத்தால் நீடிக்கப்படுதல் வேண்டும்.”.

*10-114*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.